1992 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ. 56 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : வினா எண். 104, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

104—

மகளிருக்கென தொழிற்பயிற்சிப்பள்ளி

*வினா எண். 5289 திரு. தி. சாத்தையா :

மாண்புமிகுதொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மகளிருக்கென தனியாக தொழிற்பயிற்சிப்பள்ளி (ITI) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற பெருநகரங்களில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை கிண்டியிலும், கோயம்புத்தூரிலும், திருச்சி மாவட்டம் புள்ளம்பாடியிலும் ஏற்கனவே மகளிருக்கென தனியாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மதுரையில் மகளிருக்கென தனியாக ஒரு அரசின் தொழிற் பயிற்சி நிலையம், 1992 ஆகஸ்ட்டில் துவங்கப்படவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஜில்லாவிலும் நிறைய பெண்கள் படித்து விட்டு, கலியாணமும் ஆகி, குழந்தைகளோடு வேலையில்லாமல் அலைகிறார்கள். இப்படிப்பட்ட பெண்கள் எல்லாம் ஐ.டி.ஐ. படிக்கும் ஒரு நிலையை உருவாக்கிக் கொடுத்தால், பல பேர்கள் படித்து, சுயமாகத் தொழில் துவங்க வாய்ப்பாக இருக்கும். எனவே மதுரையில் மட்டும் வரக்கூடிய ஆண்டில்

தொடங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும், திண்டுக்கல் போன்ற பின் தங்கிய பகுதிகளிலும் பெண்களுக்கான தொழிற் பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் கூறிய யோசனை மிகவும் அருமையான், சிறப்பான யோசனை. ஆனால் அதைச் செயற்படுத்தப் போதுமான நிதி ஆதாரம் அரசிடம் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதற்காக அவர்கள் வருத்தப்பட வேண்டியதில்லை. தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் யாராவது இந்த ஐ.டி.ஐ. ஆரம்பிக்க முன் வந்தால், அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒரு மைனாரிட்டி இன்ஸ்ட்டிடியூஷனிடம் கட்டிடம் இருக்கிறது, இடமும் இருக்கிறது. பணமும் வைத்திருக்கிறார்கள், தொழிற் பயிற்சிப் பள்ளி ஆரம்பிப்பதற்காக, தங்கள் பெர்மிஷன் ஒன்று தான் வேண்டும். அதைத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் விண்ணப்பித்தால் அது பற்றிப் பரிசீலித்து, முடிவெடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 105, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

105—

தொழில் நுட்ப வேலை வாய்ப்பு அலுவலகம்

*வினா எண். 5690—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

பட்டதாரிகள், முதுநிலைப் பட்டதாரிகள் மற்றும் தொழில் நுட்ப பட்டதாரிகளுக்கான ஒரே ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் சென்னையில் மட்டும் இருப்பதால், தமிழ் நாட்டின்